# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## நடவடிக்கைகளின் சுருக்க வெளியீடு எண்.6

## 2009, ஜனவரி 30, வெள்ளிக்கிழமை

## திருவள்ளுவர் ஆண்டு 2040, தை 17

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை **9.30** மணிக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

பேரவை நிகழ்ச்சிகள் கீழ்க்காணும் குறளுடன் தொடங்கி வைக்கப்பெற்றன:-

" விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின். "

( வகைப்படுத்தியும், சுவையாகவும் கருத்துகளைச் சொல்லும் வல்லமையுடையோர் சுட்டிக்காட்டும் பணியை, உலகத்தார் உடனடியாக நிறைவேற்ற முனைவார்கள். )

1. சிறப்பு கவன ஈர்ப்பு

இலங்கையில் 48 மணி நேரம் போர் நிறுத்தம் செய்திருப்பது குறித்தும் அப்பாவி தமிழ் மக்களைக் காப்பாற்ற இரு தரப்பினரும் நிரந்தர போர் நிறுத்தம் செய்ய வேண்டியது குறித்து திருவாளர்கள் எஸ். பீட்டர் அல்போன்ஸ், வை. சிவபுண்ணியம், ஜி.கே. மணி, என். நன்மாறன் மற்றும் நா. இராமகிருஷ்ணன் ஆகியோர் சிறப்பு கவன ஈர்ப்பாக அரசின் கவனத்தை ஈர்த்தனர்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் பதிலுரை வழங்கினார்.

2. குழுக்களின் அறிக்கைகள் அளித்தல்

1) சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கை அளித்தல்

திரு. இரா. இராஜேந்திரன், சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர் அவர்கள் 2008-2009-ஆம் ஆண்டிற்கான மேற்படி குழுவின் எட்டாவது (பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையைப் பேரவைக்கு அளித்தார்.

2) அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல்

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள் 2008-2009-ஆம் ஆண்டிற்கான மேற்படி குழுவின் இருபத்து ஒன்பதாவது மற்றும் முப்பதாவது (பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளைப் பேரவைக்கு அளித்தார்.

3) மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல்

திரு. கோவை தங்கம், மனுக்கள் குழுவின் தலைவர் அவர்கள் 2008-2009-ஆம் ஆண்டிற்கான மேற்படி குழுவின் அறுபத்து ஒன்றாவது முதல் அறுபத்து நான்காவது வரையிலான (பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளைப் பேரவைக்கு அளித்தார்.

3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதமும் பதிலுரையும் (நான்காம் நாள்)

கீழ்க்காணும் உறுப்பினர்கள் விவாதத்தில் கலந்து கொண்டனர் :-

35. திரு. ஜி. கே. மணி

36. திருமதி டி. யசோதா ( விவாதம் முற்றுப்பெறவில்லை )

பேரவைக்கு ஓர் அறிவிப்பு

தியாகிகள் தினத்தையொட்டி மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இன்று 30.01.2009 காலை 11.00 மணிக்கு தலைமைச் செயலக பிரதான கட்டிடத்திற்கு அருகில் உள்ள இராணுவ அணி வகுப்பு மைதானத்தில் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி செய்து வைக்க உள்ளார்கள் அந்நிகழ்ச்சியில் பேரவை

உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்கும் வகையில் பேரவை காலை 10.45 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்று மீண்டும் 11.15 மணிக்குக் கூடும். இப்பொழுது பேரவை ஒத்திவைக்கப் பெறுகிறது என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்.

பேரவை காலை 10.45 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

முற்பகல் 11.15 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தலைமையில் மீண்டும் கூடியது.

( விவாதம் தொடர்ச்சி.... )

36. திருமதி டி. யசோதா ( விவாதம் தொடர்ச்சி... )
37. திரு. இரா. விசுவநாதன்

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்கினார். மேலும் இலங்கைத் தமிழர்களுக்காக தீக்குளித்து உயிர் தியாகம் செய்த திரு. முத்துக்குமார் குடும்பத்தினருக்கு மாண்புமிகு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ.2 இலட்சம் வழங்குவதாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி அறிவித்தார்.

29.01.2009 ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திருவாளர்கள் விடியல் எஸ். சேகர், கி. ஆறுமுகம், சி. ஞானசேகரன், என். நன்மாறன், பெ. கண்ணன், செ. பொன்னுதுரை, ஓ. பன்னீர்செல்வம், கே.ஏ. செங்கோட்டையன், டி. ஜெயக்குமார், முனைவர் மு. தம்பிதுரை, திருவாளர்கள் பொள்ளாச்சி V. ஜெயராமன், அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திருமதி ஜி.லதா, திருவாளர்கள் கோவை தங்கம், இல. வேலுசாமி, வை. காவேரி அ. தமிழரசு, டாக்டர் க. நெடுஞ்செழியன் மற்றும் திரு. ப. டில்லிபாபு ஆகியோரால் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் வலியுறுத்தப்படாததால், அத்திருத்தங்கள் பேரவை அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அறிவித்தார்.

21.01.2009 அன்று திரு. கு. பிச்சாண்டி, அவர்களால் முன்மொழியப்பட்ட, ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## 4. பேரவைக்கு ஓர் அறிவிப்பு

இலங்கைப் போர் நிறுத்தம் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து இன்று 30.01.2009 இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தினை அனைவரின் மனநிறைவுக்காக மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் அவையில் படித்துக் காட்டினார்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவு ( ஆய்வு செய்தல் )

2009-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 1/2009)

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும் என்று கோரினார்.

திருவாளர்கள் ஜி.கே. மணி, பொள்ளாச்சி V. ஜெயராமன் மற்றும் விடியல் எஸ். சேகர் ஆகியோர் விவாதத்தில் கலந்துக் கொண்டனர்.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்கினார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு திருத்தப்பட்டவாறு நிறைவேற்றப்பெற வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

## 6. பேரவையை ஒத்திவைக்கும் தீர்மானம்

சட்டமன்றப் பேரவை விதி 25(1) இன்படி, பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கலாம் என்னும் தீர்மானத்தை மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்தார்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பேரவை பிற்பகல் **1.46** மணிக்கு **மீண்டும் கூடும் நாள்** குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

**மா. செல்வராஜ்,**
**செயலாளர்.**

நாஅ/–